மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போன்று சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றல்ல இது. ஆகவே, கல்லூரி முதல்வரும் மற்றவர்களும் மாணவ மாணவியர்களுக்கு நிலைமைகளை எடுத்து விளக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். அது வேலை நிறுத்தம் அல்ல. ஆசிரியர்கள் செய்தால் அது வேலை நிறுத்தம்; மாணவ மாணவியர் செய்தால் அது படிப்பு நிறுத்தமே தவிர, வேலை நிறுத்தம் ஆகாது. படிப்பு நிறுத்தத்தின் மூலம் ஏற்படும் கேட்டை அவர்களுக்கு உணர்த்த வேண்டியதில்லை. அதிலுள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து அதில் தெளிவு ஏற்படச் செய்ய ஒரு குழு அமைப்பது நலம் தரும். கல்லூரியிலிருக்கும் பேராசிரியர்கள், பெற்றோர்கள், மாணவ மாணவியருடைய பிரதிநிதிகள் மூவர் இருந்து இந்தப் பிரச்சினையை முதலில் ஆராய்ந்து அங்கேயே தீர்க்கப்படும் சூழ்நிலை ஒவ்வொரு கல்லூரிக்கும் ஏற்படவேண்டும் என்ற முறை மேற்கொள்ளப்படுகிறது. அதற்கும் மீறி வந்தால் அதற்குப் பிறகு கவனித்துக்கொள்ளலாம்.

இந்தக் கல்லூரியைப் பொறுத்த வரையில் ஒரு தமிழ் ட்யூடர் விடுதித் துணைக் காப்பாளராக இருந்தார். ட்யூடராக இருந்தவர், அஸிஸ்டென்ட் ப்ரொஃபஸராகி, அஸிஸ்டென்ட் ப்ரொபஸர் வேலையினை—வேலை உயர்வின் காரணமாக—ஏற்றுக்கொள்ளச் சென்ற நிலையில், அதைப் புரிந்துகொள்ளாத காரணத்தால், அவரை வேண்டுமென்றே மாற்றிவிட்டார்கள் என்று நினைத்து, மாணவிகள் காலை நேரத்தில் படிப்பு நிறுத்தம் செய்தார்கள். பிறகு, கல்லூரி முதல்வர் போய் விளக்கம் தந்தார். அதன்பின் மாலையில் மாணவிகள் வகுப்புக்கு வந்துவிட்டார்கள். ஆனால், அப்படிப்பட்ட நிலை ஏற்படுவது வருந்தத்தக்கதுதான். அதைத் தவிர்க்க எல்லா வகையிலும் முயற்சி எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். சட்டம் செய்வதன்மூலம் அதைத் தவிர்க்க முடியாது.

நகராட்சிகளில் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு தனி இடங்கள்

*** 50. வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

சவரத் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், மாண்பாண்டத் தொழிலாளர்கள் ஆகிய மிகவும் பின்தங்கிய சமுதாயத்தினருக்கு நகராட்சித் தேர்தல்களில் தனி இடங்கள் ஒதுக்கித்தர அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தற்போதுள்ள சட்ட விதி முறைகளில் பின்தங்கிய அல்லது மிகவும் பின்தங்கிய சமுதாயத்தினருக்கு நகராட்சித் தேர்தல்களில் தனி இடங்கள் ஒதுக்கித்தர வகை செய்யப்பட வில்லை.

Sanitary Inspectors in Municipalities

* 51 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether Senior Sanitory Inspectors are to be appointed as Health Officers in Municipalities ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, (அ) & (இ) : சீனியர் சானிடேரி இன்ஸ்பெக்டர் போன்ற பதவிகளில் இருப்பவர்களை ஹெல்த் ஆபீஸர்களாக நியமிப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவர் அவர்களே, இம்மாதிரி இன்ஸ்பெக்டர்களுக்கு உள்ள கல்வித் திறனைப் பொறுத்தாவது பதவி உயர்வு கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஹெல்த் ஆபீஸர்கள் என்று நகராட்சி மன்றங்களிலே அமர்த்தப்படுகின்றவர்களுக்குத் தேவையான கல்வி நிலைகள் இருந்தாக வேண்டியிருக்கிறது. டாக்டருக்குப் படித்த பிறகுகூட ஒரு ஆண்டுக்காலம் ஹெல்த் ஆபிஸராக இருந்து அதில் பயிற்சி பெறுவதற்கான ஏற்பாடு இருக்கின்றது. அப்படிப் பயிற்சிபெற்றவர்கள் வராத காரணத்தினால் 1962-லே ஒரு விதிமுறை ஏற்படுத்தப்பட்டு அதன்படி சானிடேரி இன்ஸ்பெக்டர்களில் சீனியராக இருக்கின்றவர்கள் சீனியர் ஆபீஸராக நியமிக்கப்பட்டார்கள். அண்மையில் 18 நகரசபைகளிலே—அப்படி சானிடேரி இன்ஸ்பெக்டரிகளிலே இருந்து சீனியர் ஆபீஸர்களாகப் பணியாற்றக்கூடியவர்கள் இருக்கின்ற இடங்களுக்கு—டாக்டராகத் தகுதி பெற்றவர்களுக்குத்தான் ஹெல்த் ஆபீஸராகப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் 9 இடங்களுக்கு அவர்கள் இன்னும் போடப்படாமல் இருக்கிறார்கள். அங்கேயும் ஹெல்த் ஆபீஸர் சிறப்பு நிலை கொடுக்கக்கூடிய வகையிலே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. திரும்பவும் சானிடேரி இன்ஸ்பெக்டர்களைக்கொண்டு ஹெல்த் ஆபீஸர்களாக நியமிக்கக்கூடிய வாய்ப்பு இல்லை.

குடும்பக் கட்டுப்பாட்டிற்கு பரிசுகள்

* 52. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தினை ஊக்குவிக்க பரிசு முறைகளைக் கையாள அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம். பேரவையின் முன் விவர அறிக்கையொன்று @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, அண்மையிலே வடஆற்காடு மாவட்டத்திலே இந்தக் குடும்பக் கட்டுப்பாடு விஷயத்திலே பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் வேலைசெய்யும் ஆசிரியர்களைக் கட்டாயமாகக் குடும்பக் கட்டுப்பாடு வேலை செய்யவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டதாக மேலவை உறுப்பினர் ஒருவர் வேலூரிலே பேசியிருக்கிறார். அதைப்பற்றி அமைச்சர் அவர்களுக்கு விவரம் தெரியுமா? என்னுடைய தொகுதியிலே வாணியம்பாடியிலே கல்யாணம் ஆகாதவருக்குக் கட்டாயமாக குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு அவர் இறந்துவிட்டதான தகவல் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

@ 385–393-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.